(See Rule 42 of CRPC)

DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR

**CC. NO.666/2019**

**Depostitions of PW- 5 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ஆறுமுகம் | Caste | |
| Father's name | பாலையா | Calling | கூலி வேலை |
| Village | மம்சாபுரம் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age. | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th day of August-2024

Signature of Witness.

29.08.2024

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை–

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 27.5.2019 ம் தேதி காலை 8.45 மணியளவில் நானும், எனது மாப்பிள்ளை பொன்முருகனும் பாலையா வீட்டின் முன்பு நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது மம்சாபுரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து என் முன்னிலையிலும், பொன்முருகன் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், பொன்முருகனும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

2. எங்கள் இருவர் முன்னிலையில் போலீசார் கைப்பட எழுதி

கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் அந்த கையெழுத்து தவிர நான் வேறு கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல.